**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No.42/2023**

Deposition of the **P.W.2** witness for

Name : **இயேசுபாலன் (செயல் அலுவலர் மணவாளக்குறிச்சி)**

Father's Name :

District :

Taluk :

Village :

Calling :

Religion :

Age :

Date : **15.12.2023**

Solemnly affirmed by Thiru/Tmt. Assistant, District Munsif Court, Eraniel in accordance with the Provision of Act XLIV of 1893.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் அழைப்பாணை அனுப்பப்பட்டதன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் மணவாளக்குறிச்சி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிகிறேன். மேற்படி பேரூராட்சிக்கு உட்பட்ட கதவு எண்-3/93 என்ற வீடு சம்மந்தப்பட்ட ஆவணங்களை கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன். மேற்படி வீடு யாரு பெயரில்எந்த காலகட்டத்தில் வரிவிதிப்பு

செய்யப்பட்டுள்ளது என்றால் 1987-88 காலகட்டத்தில் சுப்பையன் நாடார் பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது மேற்படி ஆவணம் (சான்றிட்ட நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது) வா.சா.ஆ.6 ஆகும். 23.03.2018 -ஆம் தேதி மேற்படி சுப்பையன் நாடார் மகன் விஜயன் பெயரில் தீர்வை செலுத்தப்பட்டு நாளது தேதி வரை மேற்படி விஜயன் பெயரில்தான் உள்ளது மேற்படி ஆவணம் (சான்றிட்ட நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது) வா.சா.ஆ.7 ஆகும். மேற்படி கதவு எண் கொண்ட வீட்டை இடித்துவிட்டு புதியதாக வீடு கட்டுவதற்கோ அல்லது பராமரிப்பு செய்ய வேண்டியதற்காகவோ எங்கள் அலுவலகத்தில் மனு எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் தெரியாது. அப்படியென்றால் பதிவேடுகளில் மனு எதுவும் கொடுத்ததாக துலங்குகிறதா என்றால் தற்போது நான் கொண்டுவந்துள்ள பதிவேடுகளில் அவ்வாறு துலங்கவில்லை தவிர வேறு எதாவது ஆவணங்களில் மேற்படி மனு கொடுத்ததற்கான பதிவு எதுவும் உள்ளதா என்றால் தெரியாது. முதலில் வீடு கட்டியபொழுது எவ்வளவு வரி விதிக்கப்பட்டது தற்போது எவ்வளவு வரி விதிக்கப்படுகிறது என்றால் 1987-ஆம் வருடம் 5 ரூபாய் 10 பைசா ஆகும். தற்போது ரூ.603 ஆகும். கடலிலிருந்து 500 மீட்டர் துரத்திற்குள் வீடு கட்ட எதுவும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்று சொன்னால் சரிதான்.

**(ஒப்பம்)**

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல் (பொறுப்பு)